1978 செப்டம்பர் 2]

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு தமிழ் நாட்டில் பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் உண்டா? அது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பால் வளத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு அதில் பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்கவும், அதற்கான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அத்திட்டங்களை அவர்கள் ஒப்புக் கொண்ட பிறகு அவற்றைச் செயல்படுத்த அரசு தீவிர கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக்: பேரவைத் தலைவரவர்களே, பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு தென் மாவட்டமான நெல்லை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பாலைப் பதப்படுத்தும் நிலையம் ஆரம்பிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின்கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவிற்குள் தமிழ் நாட்டில் 150 இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க உத்தேசம் இருக்கிறது. அப்போது தென் மாவட்டங்களின் பிரச்னை கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பால்வள நிறுவனங்கள்

*வினா எண் 57—திரு. த. புஷ்பராஜு: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் பால் வள நிறுவனங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் நிறுவனங்கள் அமைக்கும் நோக்கம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட அளவில் செயல்படும் ஒரு பால் வழங்கும் ஒன்றியமும் மற்றும் 47 கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களும் உள்ளன.

(ஆ) ஆம். புதிதாக கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் அமைக்க வந்துள்ள 15 பிரேரணைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. த. புஷ்பராஜு: தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதை கருத்தில் கொண்டு கிராமந்தோறும் கூட்டுறவு பால் பண்ணைத் திட்டம் அமைக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது பால் பெருக்கு திட்டத்தின்கீழ் கூடுதலாக 4,000-க்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு பால் சங்கங்கள் அமைக்க உத்தேசித்து இருப்பதாக ஆளுநர் உரையிலேயே அரசு தெளிவாகத் தெரிவித்து இருக்கிறது. அந்த அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்திலும் அமைக்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: தலைவரவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பால் வளம் பாலுக்கு அதிக விலை கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கின்றவர்களுக்கு கலப்புத் தீவனங்களை குறைந்த விலைக்குக் கொடுத்து பால் உற்பத்தியை அதிகரிப்பதுதான் அரசின் திட்டம். இருந்தாலும் உறுப்பினர் அவர்களின் கருத்தை அரசு பரிசிலனை செய்யும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS